செ.வெ.எண் : 916/2020 நாள் : 29.12.2020

# இளம்பிள்ளை வாதத் தடுப்பு சிறப்பு சொட்டு மருந்து முகாம் - 17.01.2020

போலியோ இல்லாத பொன்னுலகம் படைப்போம். குழந்தைகளை தாக்கும் இளம்பிள்ளை வாதம் என்ற போலியோ நோயை உலகிலிருந்து முற்றிலுமாக அழித்து போலியோ இல்லாத பொன்னுலகம் படைத்திடுவோம்.

1995-ம் ஆண்டு முதல் இளம்பிள்ளைவாத நோயை முற்றிலுமாக அகற்ற ஆண்டிற்கு இருமுறை சிறப்பு சொட்டு மருந்து முகாம் நடத்தப்பட்டு வந்தது. 1997ஆம் ஆண்டிற்கு பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் போலியோவால் பாதித்த குழந்தைகள் கண்டறியப்படவில்லை. இந்தியாவில் ஜனவரி 2011 முதல் தொடர்ந்து 3 ஆண்டுகளாக போலியோ நோயினால் எந்த குழந்தையும் பாதிக்கப்படாததால் 27.03.2014 அன்று உலக சுகாதார நிறுவனத்தால் இந்தியா போலியோ இல்லாத நாடாக சான்றளிக்கப்பட்டது. கடந்த ஜூன் 2016ஆம் ஆண்டு முதல் வாய்வழியாக மட்டும் அல்லாமல் ஊசி மூலமாகவும் (IPV) போலியோ மருந்து வழங்கப்பட்டு வருகிறது. எனவே இந்த ஆண்டு இச்சிறப்பு முகாம் ஒரே கட்டமாக 17.01.2021 அன்று நடைபெற உள்ளது. இம்முகாமில் 152400 குழந்தைகள் பயன்பெற உள்ளனர்.

இம்முகாம்கள் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அனைத்து அரசு மருத்துவமனைகள், நகர்புற மற்றும் கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், நகராட்சி மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் என 1236 முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4737 பணியாளர்கள் (பொது சுகாதாரம். ஊட்டச்சத்து, சத்துணவு, நகராட்சி) பணியில் உள்ளனர். இது தவிர முகாம் நடைபெறும் இடங்களுக்கு குளிர்பதன முறையில் சொட்டு மருந்து கொண்டு செல்ல 208 ஊர்திகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையான சொட்டு மருந்து மாவட்ட துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அலுவலகம், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகராட்சியில் உரிய குளிர்பதன முறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

மக்கள் கூடும் இடங்களான புகைவண்டி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், பூம்புகார் படகுத்துறை மற்றும் காந்திமண்டபம் ஆகிய இடங்களில் 20 முகாம்களும், உரிய பேருந்து வசதி இல்லாத மலைப்பகுதிகளில் நடமாடும் குழுக்கள் 14-ம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தோட்டமலை மற்றும் தச்சமலை பகுதிகளுக்கு படகுகளில் சென்று சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. முகாம் ஆய்வுப் பணிகளுக்கு 146 மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சொட்டு மருந்து கொடுக்கும் பணியாளர்களுக்கு (பொது சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் தன்னார்வத்தொண்டர்கள்) பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உறுதுணையோடு போலியோ சொட்டு மருந்து முகாம் சிறப்புற நடைபெற உள்ளது.

மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் 28.12.2020 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 17.01.2021-ல் நடைபெறும் போலியோ சொட்டு மருந்து முகாமில் 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து கொடுத்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.